விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய உயர்நீதிமன்றத்திலே சொல்லப்பட்ட தீர்ப்பில் பல்வேறு விளக்கங்கள் இருக்கின்றன. ஆகவே அதற்குள்ளே அரசு சொல்ல விரும்பவில்லை. ஆகவே அதற்கு ஒரு முடிவான தீர்ப்பு இந்த மாத இறுதிக்குள் வர இருக்கிறது. வேகமாக தண்ணீரைத் திறந்து விட வேண்டுமென்ற அக்கறை அரசுக்கு இருக்கிறது. ஆகவே இந்த மாத இறுதிக்குள்ளே அந்த வழக்கை முடிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திலே கேட்டிருக்கிறோம். அந்த முடிவு தெளிவாக வந்ததற்குப் பின்னாலே, உயர்நீதிமன்றம் என்ன உத்தரவைத் தருகிறதோ, அதைப்போல இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11.45*

(ஆ) பேராவூரணி மற்றும் பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி மற்றும் பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடங்கள் உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ளது குறித்து' மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

பேராவூரணி கால்நடை மருந்தகம்

பேராவூரணி கால்நடை மருந்தகம் *1964*ம் வருடம் நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டது. அதன்பின் இந்தக் கட்டிடப் பழுதுகள் சில செப்பனிடப்பட்டன. *1993*-ல் பலத்த மழையின் காரணமாக கட்டிடத்தின் மேல்தளம் மற்றும் தரை பாதிக்கப்பட்டு ஆங்காங்கு கசிவுகள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளது. இதைச் செப்பனிட ரூ. *5,000*-க்கு மதிப்பீடு பெறப்பட்டு நிதி இசைவாணை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் *17–3–1994* அன்று வழங்கப்பட்டுள்ளது.

பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடம்

பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடம் 1965-ம் வருடம் நெடுஞ்சாலைத் துறையினரால் ரூ.29,129/-செலவில் கட்டப்பட்டது. அதன்பின்னர் 1971-72, 1984-85, 1992-93 ஆம் ஆண்டுகளில் பழுது செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1993-ல் பலத்த மழையின் காரணமாக கட்டிடத்தின் மேல்கூரை பாதிக்கப்பட்டு ஆங்காங்கே கசிவுகள் ஏற்பட்டுச் சேதமடைந்துள்ளது. இதைச் செப்பனிட ரூ. 4,975-க்கு நிதி இசைவாணை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் 12-3-1994 அன்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்தேன். நம்முடைய மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அவசர நடவடிக்கையெடுத்து பேராவூரணி கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்கும், பெருமகளூர் கால்நடை மருந்தகக் கட்டிடத்திற்கும் பழுது பார்ப்பதற்காக தக்க நடவடிக்கையெடுத்து, தலா 5,000 ரூபாய் சாங்ஷன் செய்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் மீண்டும் தெரிவித்து, உடனடியாக அந்த வேலைகளைத் தொடங்கி, விரைவிலே அந்தக் கசிவினை அடைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி துரிதமாக நடைபெற அரசு உத்தரவிட்டுள்ளது.

5. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் முப்பத்தெட்டாவது மற்றும் முப்பத்தொன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.